1987 ஏப்ரல் 6]

பின்னாலே போஸ்டர்களை ஒட்டுகின்ற காரணத்தினால் அந்த வண்டிகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் போக்குவரத்துக் கழகத்திற்கு அதிகமான செலவுகள் ஏற்படுகின்றன. நாம்கூட, பின்னால் விளம்பரத்திற்கு என்று ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று யோசித்தோம். ஆனால் முறையாக அது பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் அரசினுடைய கோரிக்கையாக இருக்கிறது. எனவே, அதைப் பற்றி எதிர்காலத்திலே யோசிக்கப்படும். ஏறத்தாழ சென்னையிலே மட்டும் 2,300 வண்டிகள் வரை—சுமாராகச் சொல்லுகிறேன். சரியான கணக்கு இப்பொழுது இல்லை. 2,300 வண்டிகள் வரை—இயங்கிக்கொண்டு இருக்கின்றன. எனவே 2,300 வண்டிகளிலேயும் பின்னாலே விளம்பரப்படுத்துவதற்கான ஏற்பாடு செய்வதைப் பற்றித் தனியாக ஆய்வு செய்யப்படும்.

தமிழகத்திலுள்ள பேருந்து நிலையங்கள்.

311—(*வினா எண் 9529) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களையும் போக்குவரத்துத் துறையே ஏற்று செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கும்பகோணம்-சென்னை நெடுஞ்சாலையிலுள்ள வெள்ளாற்றுப் பாலத்தை அகலப்படுத்தல்.

312—(*வினா எண் 9931) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம்-சென்னை நெடுஞ்சாலையில் சேத்தியாதோப்பிற்கு அருகில் உள்ள வெள்ளாற்றுப் பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1987 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இரண்டு கோடியே 20 இலட்சம் ரூபாய்.

ஈரோட்டில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையம்.

313—(வினா எண் 13432)* **திரு. கு. அ. செங்கோட்டையன், திரு. ச. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு பேருந்து நிலையத்தில் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ஈரோடு பேருந்து நிலையத்தில் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து நிலையம் ரூ. 50 இலட்சம் செலவில் கட்டும் திட்டம் தொடங்கப்பட்டு, சுற்றுச் சுவர் கட்டுமானப் பணிகள் பாதி முடிவடைந்தும், பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப் பட்டுள்ளது. ஈரோடு நகராட்சியின் ஒப்புதல் கிடைத்தவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு விரைவில் முடிக்கப் படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: தலைவரவர்களே, காம்பவுண்ட் சுவர் எல்லாம் கட்டப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் ஈரோடு நகராட்சியிலிருந்து அனுமதி பெறப்படவில்லை என்று சொன்னார்கள். 50 இலட்சம் ரூபாய் செலவில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கட்டப்படும் பேருந்து நிலையப் பணிக்கு அனுமதி அளிக்க அந்த நகராட்சி என் தயக்கம் காட்டுகிறது என்று அறிய விரும்புகிறேன்.